**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 24.01.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சி

மண் பரிசோதனை ஆய்வகங்கள் (STLs) மற்றும் நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகங்களில் (MSTLs) பணிபுரியும் வேளாண் அலுவலர்களுக்கான, "பல்வேறு பயிர்களுக்கு மண் வளத்திற்கும் பயிர் மகசூல் இலக்கிற்கும் ஏற்ற உரப் பரிந்துரைகள்" குறித்த மூன்று நாள் (21–23 ஜனவரி 2026) பயிற்சியின் (தொகுதி II) நிறைவு விழா 23.01.2026 அன்று கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணைந்து ஏற்பாடு செய்தன.

முனைவர். து. செல்வி, பேராசிரியர் மற்றும் தலைவர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை அவர்கள் கூட்டத்தினரை வரவேற்று, நிலையான விவசாயத்தை ஊக்குவிப்பதிலும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும் மண் வளத்திற்கும் பயிர் மகசூல் இலக்கிற்கும் ஏற்ற உரப் பரிந்துரை தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மூன்று நாள் பயிற்சி அமர்வுகள் குறித்த கண்ணோட்டத்தையும் அவர் வழங்கினார்.

திருமதி. மீ.தமிழ் செல்வி, எம்.எஸ்சி. (வேளாண்மை), வேளாண் இணை இயக்குநர், கோயம்புத்தூர் பாராட்டுரை வழங்கினார். தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறைக்கும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான அறிவுப் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்புக்கு இந்தப் பயிற்சி ஒரு முக்கியமான தளமாக அமைந்தது என்பதை அவர் எடுத்துரைத்தார். மண்வள அட்டையின் முக்கியத்துவம் குறித்து விரிவாக விளக்கினார்.

முனைவர்.ப.பாலசுப்பிரமணியம், இயக்குநர் (இயற்கை வள மேலாண்மை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அவர்கள், தனது தலைமை உரையில், நிலையான விவசாயத்தில் மண் பரிசோதனையின் முக்கிய பங்கை வலியுறுத்தினார். பசுமைப் புரட்சியிலிருந்து நவீன சாகுபடிகள் வரை உரப் பயன்பாட்டுத் திறனில் ஏற்பட்ட மாற்றங்களை அவர் எடுத்துரைத்தார், மேலும் சமநிலையற்ற உரப் பயன்பாட்டின் சுற்றுச்சூழல் விளைவுகளை அடிக்கோடிட்டுக் காட்டினார். உரங்கள் மற்றும் கரிம உரங்களின் நிலையான மற்றும் ஒருங்கிணைந்த பயன்பாட்டின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார், மண் பரிசோதனை அடிப்படையிலான உரப் பரிந்துரை மற்றும் மகசூல் இலக்கு அணுகுமுறைகளை ஊக்குவித்தார். தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் மண் பரிசோதனை ஆய்வகங்கள் (STLs) மற்றும் நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகங்களில் (MSTLs) பணிபுரியும் வேளாண் அலுவலர்கள், பயிர்களுக்கு மண் வளத்திற்கும் பயிர் மகசூல் இலக்கிற்கும் ஏற்ற உரப் பரிந்துரைகளை விவசாயிகளுக்கு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

முனைவர். ந.செந்தில், இயக்குநர் (பயிர் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம்), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அவர்கள், நிறைவுரையாற்றினார். நிலையான மண் மேலாண்மை மற்றும் காலநிலை மீள்தன்மை மீதான தேசிய முக்கியத்துவம் அதிகரித்து வருவதை மையமாகக் கொண்டு, மண் வளத்தை மேம்படுத்துவதில் இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகளை அவர் பாராட்டினார். சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பாதுகாக்கும் அதே வேளையில், உலகளாவிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மண் வளத்தைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பயிர்களில் ஊட்டச்சத்து போக்குவரத்தின் வழிமுறைகள், நுண்ணூட்டச்சத்து குறைபாட்டைக் குறைக்க துத்தநாகம் மற்றும் இரும்புடன் உயிரி வலுவூட்டல் மற்றும் மண் வரைபடம் மற்றும் புவியியல் தகவல் அமைப்பு ஆகியவற்றில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்தும் அவர் விவரித்தார். நிறைவு விழாவின் போது, அவர் பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பயிற்சி தொடர்பான "பல்வேறு பயிர்களுக்கு மண் வளத்திற்கும் பயிர் மகசூல் இலக்கிற்கும் ஏற்ற உரப் பரிந்துரைகள் " கையேட்டையும் வெளியிட்டார்.

முனைவர்.சு.மரகதம், பேராசிரியர் (மண்ணியல்) மற்றும் திட்டப் பொறுப்பாளர் (மண் வளத்திற்கும் பயிர் மகசூல் இலக்கிற்கும் ஏற்ற உரப் பரிந்துரை) அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. மண் பரிசோதனை ஆய்வகங்கள் (STLs) மற்றும் நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகங்கக்களைச் (MSTLs) சேர்ந்த 30 வேளாண் அலுவலர்கள் பயிற்சித் திட்டத்தில் பங்கேற்று தொழில்நுட்ப விவாதங்களிலிருந்து பயனடைந்தனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***